**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 87/2021**

**வாதி தரப்பு சாட்சி- 1 தங்கராஜ் - திருமதி.S.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.06.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**:

1) இவ்வழக்கின் விபரங்கள் ஓரளவு தெரியும். இவ்வழக்கில் எத்தனை அயிட்ட சொத்தை காட்டியுள்ளேன் என்றால் 2 அயிட்டம் காட்டியுள்ளேன். அரசு அதிகாரியை எதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சர்வே எண் 779 ல் எனது பெயரை நீக்கி விட்டார்கள், அதற்காக சேர்த்துள்ளேன். எப்போது நீக்கினார்கள் என்றால் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது நீக்கிவிட்டார்கள். எனக்கு எப்போது தெரியும் என்றால், உடனே தெரிந்து கொண்டேன். அவ்வாறு நீக்கம் செய்தது தவறு என்றும், எனது பெயரை சேர்க்க வேண்டும் என வருவாய் துறை அலுவர்களிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவ்வாறு மனு கொடுத்ததன் பேரில் விசாரணை நடந்ததா என்றால் இல்லை. விசாரணை செய்யாதது குறித்து உயர் அதிகாரிகளுக்கு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவ்வாறு கொடுத்த மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

2) எனது பெயரை நீக்கிவிட்டு யார் பெயரை சேர்த்துள்ளார்கள் என்றால் நாச்சியப்பஉடையார் பெயரை சேர்த்துள்ளார்கள். நாச்சியப்ப உடையார் எனது பக்கத்து நிலத்துக்காரர். அவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எதனால் சேர்க்கவில்லை என்றால் எனக்கு விபரம் தெரியவில்லை. எதனால் நாச்சியப்ப உடையார் பெயரை சேர்த்தார்கள் என்றால், நாச்சியப்ப உடையாரிடம் இருந்து செட்டியார் கிரையம் பெற்றார், செட்டியாரிடம் இருந்து கருப்பஉடையார் கிரையம் பெற்றார். பின்னிட்டு சீத்தாலட்சுமி கிரையம் பெற்றார், சீத்தா லட்சுமியிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய கோருகிறேன்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**